1973 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆக்கிரமிப்பைக் காலி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த ஆக்கிரமிப்பு நீண்ட காலமாக இருக்கிற காரணத்தினுல், அங்கே குட்டை திட்டம் நிறைவேற்றப்பட தடையாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த ஆக்கிர மிப்பை அகற்றுவதற்கு மாவட்ட துணை அதிகாரி ஆணைகள் பிறப் பித்திருக்கிருர். குளித்தலை தாசில்தார் ஆக்கிரமிப்புச் செய்த வர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிருர்.

ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்தல்

* 469 வினு—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஊராட்சி ஒன்றியம் 62 ஊராட் சிகளைக் கொண்டதாக, 400 சதுர மைல் கொண்டிருக்கிறது. இதற்கு ஒதுக்கப்படுகிற தொகை கடலில் கரைத்த பெருங்காயமாக மாறிவிடுகிறது. ஆகவே, இதனை 2 ஆகப் பிரிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிற இதுபோன்ற கேள்விகளுக்கு நானும் இதே மன்றத் தில் 10 முறைகளுக்கு மேல் பதில் அளித்திருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களை 374 க்குமேல் பிரிக்கக்கூடாது என்கிற நிலைமை இருக்கிறது, மத்திய சர்க்கார் உதவி அளிக்கிற காரணத்தினுல்.

[1973 நவம்பர் 28

அடுத்த ஆண்டு முதல் இந்த உதவியை நிறுத்திவிட இருப்பதனால். நாமே அந்தத் தொகை பூராவையும் ஒதுக்கிச் செலவிட ஏற்படுகிற போது இதுபற்றி பரிசீலிக்க முடியும். இப்போது முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* 470 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவும் அதேபோன்ற கேள்விதான். ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்கு இப்போது முடியாது.

திரு. நா. வெ. குருசாமி : இந்த ஒன்றியத்தில் மலைப்பகுதி அதிகமாக இருக்கிறது. ஊராட்சித் தலைவர்கள் இன்றைக்கு சென்றால் நாளைக்கு அங்கே போய்ச்சேரக்கூடிய அவலநிலைதான் இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நானும் இன்று போய் நாளை வா என்று சொல்ல விரும்பவில்லை, அது உரியகாலத்தில் பரிசீலிக்கப்படும்.

தரங்கம்பாடியை நகராட்சியாக்கல்

* 471 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுகா தரங்கம்பாடி பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.